# பேரழிவு காலத்தில் வெளியிடப்பட்ட அவசர கால விதிமுறைகளும் ஊடகங்கள்-சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதலும்

மோசமான வானிலை நிலைமைகள் காரணமாக 2025 நவம்பர் 28 அன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இல. **2664/30** மூலம் .அதிமேதகு ஜனாதிபதியால் இலங்கை முழுவதும் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டது.

இந்த பிரகடனத்துடன் ஜனாதிபதிக்கு அவசரகால விதிமுறைகளை விதிக்க சட்ட அதிகாரம் வழங்கப்பட்டது. அதன்படி ஜனாதிபதி 2025 நவம்பர் 28 அன்று அதிவிசேட வர்த்தமானி இல. 2464.31 மூலம் அவசரகால (பலதரப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) விதிமுறைகள் இல. 1 2025 ஐ வெளியிட்டார்.

### அவசர கால விதிமுறைகளின் சட்டப் பின்னணி

அரசியலமைப்பின் உறுப்புரை 155 இன் படி பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகால விதிமுறைகளை வெளியிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. இத்தகைய விதிமுறைகள் அரசியலமைப்பைத் தவிர நடைமுறையில் உள்ள வேறு எந்தச் சட்டத்தையும் மீறலாம்.

அவசரகால விதிமுறைகளை விதிப்பதற்கான அடிப்படைக் கட்டளைகள் பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் இல. 25 1947 இல் உள்ளன. இந்த கட்டளைச் சட்டத்தின்படி இலங்கையின் எந்தப் பகுதியிலோ அல்லது இலங்கை முழுவதிலோ ஒரு அவசரநிலை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி கருதினால் அவர் நாட்டில் அவசரகால நிலையை அறிவிக்கலாம். இது வர்த்தமானி அறிவிப்பு மூலம் வெளியிடப்பட வேண்டும். அத்தகைய அறிவிப்பு ஒரு மாத காலத்திற்கு செல்லுபடியாகும்.

எனினும் ஜனாதிபதியால் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டால் அது 10 நாட்களுக்குள் பாராளுமன்றத்தின் தீர்மானம் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் 10 நாட்களுக்குள் அதனை அங்கீகரிக்கத் தவறினால் அவசரகால நிலை அமுல்படுத்தப்பட்ட நாளிலிருந்து 14வது நாளில் காலாவதியாகிவிடும்
.

மேலும் நிலைமையைக் கட்டுப்படுத்த குறிப்பிட்ட விதிமுறைகள் வர்த்தமானி மூலம் வெளியிடப்படுகின்றன. இவை அவசரகால விதிமுறைகள் என்று அழைக்கப்படுகின்றன. அவசரகால நிலை ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றத்தால் நீட்டிக்கப்படுகிறது. இது ஜனாதிபதியால் வெளியிடப்படும் விதிமுறைகளுக்கு சட்டப்பூர்வ சக்தியை வழங்குகிறது (அரசியலமைப்பின் உறுப்புரைகள் 155(4) மற்றும் 155(5)). அவசரகால விதிமுறைகள் பாதுகாப்புப் படைகளுக்கு கூடுதல் அதிகாரத்தையும் பொறுப்பையும் வழங்குகின்றன அத்துடன் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளையும் கட்டுப்படுத்துகின்றன.

### அவசரகால விதிமுறைகளும் கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமையும்

அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(அ) ஆனது வெளியிடுதல் உட்பட கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் ஒவ்வொரு பிரஜையின் அடிப்படை உரிமை எனக் கூறுகிறது. இருப்பினும் அரசியலமைப்பின் உறுப்புரை 5(7) ஆனது இந்த உரிமை அந்த நேரத்தில் நடைமுறையில் உள்ள பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு மட்டுமே அனுபவிக்க முடியும் என்று குறிப்பிடுகிறது.

அதன்படி ஊடகங்களைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை அவசரகால விதிமுறைகளால் கட்டுப்படுத்தப்படலாம்.

**அவசரகால விதிமுறைகள் இல. 1 2025**

இந்த அவசரகால விதிமுறைகள் 7 பகுதிகளைக் கொண்டவை அவை:

- பாகம் 1: பொது
- பாகம் 2:: வளாகங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வைத்தல் மற்றும் தனிப்பட்ட சேவைகளை கையகப்படுத்துதல்
- பாகம் 3: : : நுழைவுக்கான உரிமைகள் முதலியன
- பாகம் 4 : தேடுதல் மற்றும் குற்றத்தின் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்தல்
- பாகம் 5 : குற்றங்கள் மற்றும் தண்டனைகள்
- பாகம் 6 : : விசாரணைகள் வழக்குகள் முதலியன
- பாகம் 7: பலதரப்பட்டவை

**ஊடகங்கள்சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் கவனிக்க வேண்டிய ஏற்பாடுகள்**

இந்த அவசரகால விதிமுறைகளின் கீழ் ஊடகங்கள்சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போது கவனிக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள்விதிமுறைகளின்

பாகம் 5 – குற்றங்கள் மற்றும் தண்டனைகள் இன் கீழ் காணப்படுகின்றன.

1. அதிருப்தியைத் தடுத்தல் அவசரகால விதிமுறைகளின் விதிமுறை 18 ஆனது அரசாங்கத்தின் அதிகாரி ஒருவருக்கு அரசாங்க சேவையில் உள்ள ஒருவருக்கு அல்லது அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு எதிராக அதிருப்தியை ஏற்படுத்த முயற்சிப்பது ஒரு குற்றம் என்று கூறுகிறது. எனவே ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போது அரசாங்க அதிகாரிகள் அல்லது அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது அதிருப்தியை ஏற்படுத்தக்கூடிய உள்ளடக்கத்தை வெளியிடுவதைத் தவிர்க்க கவனமாக இருக்க வேண்டும்.

2. வதந்திகள் அல்லது தவறான கூற்றுகளைத் தெரிவித்தல் அல்லது பரப்புதல்): அவசரகால விதிமுறைகளின் விதிமுறை 20 ஆனது எந்தவொரு நபரும் வாய்மொழி மூலமாகவோ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு உட்பட தன்னாட்சி அமைப்புகள் மூலமாகவோ அல்லது எந்தவொரு எழுத்துப்பூர்வமான இலத்திரனியல் டிஜிட்டல் அல்லது வேறு எந்த ஊடகம் மூலமாகவோ பொதுமக்களுக்கு பயம் அல்லது பீதியை ஏற்படுத்தக்கூடிய அல்லது பொதுமக்களை குழப்பக்கூடிய எந்தவொரு வதந்தியையும் அல்லது தவறான கூற்றையும் தெரிவிக்கவோ வெளியிடவோ உருவாக்கவோ அல்லது பரப்பவோ கூடாது என்று கூறுகிறது. எனவே ஊடக உள்ளடக்கத்தை உருவாக்கும் போதும் பரப்புரை செய்யும் போதும் உள்ளடக்கத்தின் துல்லியத்தன்மை கண்டிப்பாக உறுதி செய்யப்பட வேண்டும்.

விதிமுறை 26 மேலும் கூறுவதாவது அத்தகைய குற்றத்தைச் செய்வது மட்டுமல்லாமல் அதற்கான தயாரிப்பு முயற்சி மற்றும் அத்தகைய குற்றத்திற்கு உதவுவது அல்லது தூண்டுவதும் ஒரு குற்றமாகும்.

**கைது மற்றும் வழக்குத் தொடர்தல்**

விதிமுறை 36 ஆனது பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிகமாக இராணுவம் விமானப்படை மற்றும் கடற்படையின் கமிஷன் பெற்ற மற்றும் கமிஷன் பெறாத அதிகாரிகளுக்கும் அவசரகால விதிமுறைகளை மீறுவது குறித்து விசாரிக்கவும் கைது செய்யவும் அதிகாரம் உள்ளது எனக் கூறுகிறது. மேலும் இந்த விவகாரம் தொடர்பான வழக்குத் தொடரல் மற்றும் நீதித்துறை முடிவுக்கான அதிகாரம் சட்டமா அதிபரிடம் உள்ளது.

### ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் வாக்குமூலங்களைப் பதிவு செய்தல்

அவசரகால விதிமுறைகளின் கீழ் குற்றம் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் ஒரு நபரால் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு குறையாத ஒரு அதிகாரிக்கு வழங்கப்பட்ட வாக்குமூலம் அல்லது ஒப்புதல் வாக்குமூலம் அந்த நபருக்கு எதிராக நடைபெறும் எந்தவொரு வழக்கிலும் அவருக்கு.'. அவளுக்கு எதிராக ஆதாரமாகப் பயன்படுத்தப்படலாம் என்று விதிமுறை 41 கூறுகிறது.

### தண்டனைகள்

மேற்கண்ட குற்றத்திற்காக தண்டிக்கப்படும் ஒருவருக்கு மூன்று மாதங்களுக்குக் குறையாததும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாததுமான கடுங்காவல் சிறைத் தண்டனையும் அத்துடன் ஐநூறு ரூபாய்க்கு குறையாததும் ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாததுமான அபராதமும் விதிக்கப்படலாம் என்று விதிமுறை 29 கூறுகிறது.

### முடிவுரை

நாம் நமது வரலாற்றில் மிகவும் கடுமையான இயற்கை அனர்த்தங்களில் ஒன்றை எதிர்கொண்டுள்ளோம். இது பல பிரஜைகளுக்கு உதவி தேவைப்படும் ஒரு தருணம். மேலும் பொறுப்பான மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பயன்பாடு மிக முக்கியமானதாக மாறியுள்ள தருணமும் இதுவாகும். எனவே பிரதான ஊடகங்களில் மட்டுமல்லாமல் சமூக ஊடகங்களிலும் உள்ளடக்கத்தை உருவாக்கும் போதும் பகிர்ந்துகொள்ளும் போதும் நாம் அதிக பொறுப்புடன் செயல்படுவோம்.

ஊடகச் சட்ட நிறுவனம் சார்பாகத் தயாரிக்கப்பட்டது: சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி

LL.B(Colombo), MA(Mass Comm: -Kelaniya)
02nd December 2025